**தலைப்பு - 149 கைத்தொழில் அமைச்சு**
-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு - 149 கைத்தொழில் அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கைத்தொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 ஒக்தோபர் 04 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, இவ் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான கைத்தொழில் அமைச்சு நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட

கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளில் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை தெரிவிக்கும் 1.6.1 (ஆ) பந்தியில் காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆரம்ப கைத்தொழில் பிரிவினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 102.9 மில்லியன் தொகை பெறுமதியான 11 வாகனங்கள் மற்றும் சிறிய மற்றும் மத்திய அளவான தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 161.9 மில்லியன் பெறுமதியான 16 வாகனங்கள் பல்வேறு அமைச்சுக்களிலிருந்து கிடைத்திருந்ததுடன், 2023 திசெம்பர் 31 திகதி அளவில் அந்த வாகனங்களை அமைச்சுக்கு உரித்தாக்கி பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | அடிக்கடி அமைச்சின் விடயப் பரப்புக்கள் மாற்றடைந்த காரணத்தினால் நிலையான தன்மையொன்று காணப்படாமையால் உரித்தாக்கல் மேற்கொள்ளப்படாததுடன், தற்போது கைத்தொழில் அமைச்சுக்கு உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என. | வாகனங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு மற்றும் பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அமைச்சினால் நிர்மாணிக்கப்படும் கட்டிடங்களின் பெறுமதி அதன் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், கைத்தொழில் அபிவிருத்தி பிரிவிலிருந்து கிடைத்த தகவல்களின் படி 1996 ஆண்டு முதல் 16 கைத்தொழில் பேட்டைகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 13 | இந்தக் காணிகள் கைத்தொழில் பேட்டைகள் என குறிப்பிட்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டு நிறுவப்பட்டிருந்ததுடன், இந்தக் காணிகளின் உரிமை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, பிரதேச செயலகம், மகவெலி அதிகார | கட்டிடங்களின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்வாகக் கட்டிடங்கள், 03 கைத்தொழிற்சாலைக்ள மற்றும் 02 அலுவலகங்கள, வீடுகள் / சேவைக் கட்டிடங்களின் பெறுமதியாகிய ரூபா 544.94 மில்லியன் தொகை 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணக்கீடு செய்திருக்கவில்லை. | சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை போன்ற அரச நிறுவனங்களுக்கு சொந்தமானது எனவும், அதன்படி, திறைசேரியில் அரச கணக்குத் திணைக்களத்திலிருந்து கிடைக்கும் ஆலோசனையின் படி எதிர் காலத்தில் நிதி அல்லாத சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்படவுள்ளது எனவும். அதன்படி திறைசேரியின் அரச கணக்குத் திணைக்களத்திலிருந்து கிடைக்கும் அறிவுரையின் படி எதிர் காலத்தில் நிதி அல்லாத சொத்துக்கள் என கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | |
| (இ) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ACA – 06 படிவத்தில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 719,025,340 தொகைக்கான பயணிகள் வாகனங்களின் பெறுமதி தொடர்பாக விரிவான அட்டவணையொன்று சமர்ப்பித்திருக்கவில்லை. | ACA - 06 படிவத்தில் காட்டப்பட்டுள்ள பயணிகள் வாகனத்தின் பெறுமதி ரூபா 719,025,340 தொகைக்கான விரிவான ஆவணங்கள் அரச கணக்குத் திணைக்களத்தின் CIGAS கணினி முறைமை மூலம் பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் போனது என அரச கணக்குத் திணைக்களத்தை அறிவுருத்தி கணினி நிகழ்ச்சித் திட்டத்திற்கு தேவையானவாறு சரி செய்தல்கள் மேற்கொள்வதற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என. | கணக்கு மீதிகள் தொடர்பாக நாளதுவரை ஆக்கப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 13 மூலதனச் செலவு விடயங்கள் மற்றும் 19 மீண்டுவரும் செலவு விடயங்கள் தொடர்பாக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,022,600,000 தொகைக்கான தேறிய ஏற்பாடுகளில் ரூபா 252,453,771 தொகை பயன்படுத்தப்பட்டு ரூபா 770,146,229 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அது செலவு விடயங்களின் தேறிய ஏற்பாடுகளில் 51 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சைப் பெற்றிருந்தது. | அமைச்சுச் செயலாளரினால் அமைச்சின் மீண்டுவரும் செலவுகளில் 15 சதவீதம் சேமிக்கும் படி ஜனாதிபதி செயலாளருடன் கையொப்பமிடப்பட்ட செயலாற்றல் உடன்படிக்கையின் காரணமாக, அமைச்சின் அலுவலகத்திற்குரிய செலவுகள் இந்த அமைச்சு மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு இடையே பகிரப்படுவதனால் மற்றும் செலவு முகாமைத்துவம் கடைபிடித்து பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 01/2023 படி 06 சதவீதத்தினால் மீண்டுவரும் செலவுகளை வெட்டுதலும் புதிய சேமித்தலுக்கான காரணமாக இருந்தது. | செலவு மதிப்பீடுகள் முடிந்த அளவு சரியாக மற்றும் செலவுகளை குறைக்கக்கூடியவாறு தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன், ஒதுக்கப்பட்ட தொகையை உச்சமட்ட பயன்தரக் கூடிய விதமாக பயன்படுத்தப்பட்டு திட்டமிடப்பட்ட கருமங்களை நிறைவேற்றிக்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 06 மூலதனச் செலவு விடயங்கள் மற்றும் 03 மீண்டுவரும் செலவு விடயங்கள் தொடர்பாக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 5,400,000 தொகை மொத்த தேறிய ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது. | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 02/2022 இற்கு இணங்க அத்தியவசியமான செலவுகளுக்காக மாத்திரம் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல், அமைச்சுச் செயலகத்திற்காக பெருந்தோட்ட அமைச்சினாலும் செலவிடப்படுவதனாலும் அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த பாதீட்டு ஏற்பாடுகளில் இருந்து செலவுகள் மேற்கொள்வதற்கு தேவை ஏற்படாமை, இந்த செலவு விடயத்தில் மொத்த தேறிய ஏற்பாடுகளும் சேமிப்பதற்கு காரணமாக இருந்தது என. | செலவுகள் மதிப்பீடுகள் முடிந்த அளவு மற்றும் செலவுகள் குறையக்கூடியவாறு தயாரிக்கப்பட வேண்டியதுடன், ஒதுக்கபட்ட தொகையை உச்சப் பயன்பெறக்கூடிய விதமாக பயன்படுத்தி திட்டமிட்டப்பட கருமங்களை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டு தொடர்பாக 2024 ஆண்டின் போது 17 செலவு விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,457,642 தொகைக்காக கொடுப்பனவு, பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டு செலுத்தப்பட்டிருந்த 17 செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 2,457,642 இற்கான பெறுமதி 2023 ஆண்டின் கணக்குகளில் பொறுப்புக்கள் என தொடர்ந்தும் காட்டுவதற்கு தேவைப்பாடொன்று காணப்படவில்லை. | ஆண்டிற்குரிய அனைத்துப் பொறுப்புக்களும், பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காட்டப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனா ன தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 37 | கொடுப்பனவுகள் அங்கீகரிக்கும் போது சேவைகள், வேலைகள் அல்லது வழங்கல்கள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டதென திருப்தியடைந்து கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், உள்நாட்டு சிவப்புக் களி ஓடு உற்பத்திக்காக இலங்கை தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நிதி உதவி வழங்கும் செயற்திட்டம் ஒன்றிற்காக இலங்கை கட்டளைகள் பணியகத்திற்கு 2016 ஆண்டின் போது ரூபா 4,298,224 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதன் உண்மையான செலவு ரூபா 3,032,461 தொகையாக இருந்தது. அதன்படி, கொடுப்பனவு அங்கீகரிக்கும் போது பூர்த்தி செய்யப்பட்ட வேலையின் அளவினை மிகைத்து ரூபா 1,265,762 | இணக்கப்பாட்டின் படி செயற்திட்டத்தை தொடர்ந்து நடாத்திச் செல்வதற்காக இலங்கை கட்டளைகள் நிறுவனத்திற்கு இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட போதிலும், சில கைத்தொழில் நிறுவனங்கள் பல்வேறு காரணங்களினால் இடை நடுவே செயற்திட்டத்திலிருந்து விளகியிருந்தமையால் இந்தத் தொகை சேமிக்கப்பட்டதெனவும், இந்தப் பணத்தைக் கொண்டு இதற்குச் சமமான செயற்திட்டமொன்று மீண்டும் செயற்படுத்தப்பட்ட போதிலும் நாட்டில் நிர்மாணத்துறையில் பின்னடைவு ஒன்று | வழங்கல்கள் அல்லது சேவைகள் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டதென திருப்தியடைந்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். மிகையாக செலுத்தியிருந்த தொகையை திரும்பப் பெற்றுக்கொள்வதற்காக அல்லது வேறொரு செயற்திட்டம் ஒன்றின் செலவுகளுக்காக எதிரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்பட்டிருந்த காரணத்தினால் இந்த செயற்த்திட்டம் 2023 ஆண்டில் செயற்படுத்த முடியாமல் போனது. | |
| (ii) | நிதிப் பிரமாணம் 104(4) | நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக அது ஏற்பட்ட நாள் முதல் மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 02 வாகனங்கள் தொடர்பான விபத்துக்கள் ஏற்பட்டு மூன்று மாதங்களை விட கூடிய காலம் கடந்திருந்த போதிலும், முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முழுமையான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன், காப்புறுதி நட்டஈடுகள் தொடர்பான சிக்கல் நிலைமையொன்று காரணமாக அறிவிடப்பட்ட தொகை குறிப்பிட முடியாமல் போனதால் முழுமையான அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முடியாமல் இருந்தது என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க விபத்துச் சேதங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 571(3) | குறிப்பிட்ட விபரங்கள் கிடைக்கும் வரை வைப்புக் கணக்கொன்றில் நிச்சயமற்ற தன்மையினால் வைக்கப்பட்டுள்ள பணம் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு குறிப்பிட்ட கணக்கிற்கு அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு அல்லது கூடிய விரைவில் திருப்பிச் செலுத்தியிருந்த போதிலும் அமைச்சினால் நியதிச் சட்ட கொடுப்பனவுகளுக்காக தற்காலிகமாக தடுத்து வைத்தல் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 2,942,500 தொகைக்கான வைப்புத் தொகை தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | வைப்புக் கணக்குகளில் காணப்படும் பணம் தொடர்பாக குறிப்பிட்ட பிரிவுகளுடன் நடவடிக்கை எடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வைப்புக் கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பணம் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஜனவரி 16 திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் சுற்றறிக்கை இலக்கம் 08/2016 இன் இணைப்பு I | 2023 ஆண்டின் பெறுகைத் திட்டம், வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்துக்கு நேரொத்ததாக தயாரித்திருக்கவில்லை. | ஒட்டுமொத்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படி உரிய பிரிவுகளுக்கு அறிவுறுத்தப்பட்டது என. | சுற்றறிக்கை விதிமுறைக்கு இணங்க பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செய்பணிகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 17 கைத்தொழில் பேட்டைகள் தொர்பாக 89 காணித் துண்டுகள் (109.5 ஏக்கர்கள்) கைத்தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் காணிகள் வழங்கப்படாமையால் அந்த காணிக்கள் விளைவற்றுக் காணப்பட்டது. | புதிய கைத்தொழில் செயற்திட்டங்கள் ஆரம்பிப்பதற்கு முதலீட்டாளர்கள் முன்வராமை, நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக கைத்தொழில்களுக்கு ஒதுக்கப்பட்ட காணி கைத்தொழில்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட காணிகளுக்காக கேள்விகள் குறைவடைதல் காரணமாக இந்தக் காணிகள் வெறுமையாக காணப்பட்டது. | தகைமையுடைய முதலீட்டாளர்களை தெரிவு செய்து கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 16 கைத்தொழில பேட்டைகள் தொடர்பாக 130 கைத்தொழிலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயற்திட்ட அறிக்கைகளின் படி உருவாக்குவதற்காக எதிர்பார்க்கப்பட்ட தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை 10,475 தொகையாக இருந்த பேரிலும் தற்போது உருவாக்கப்பட்டிருந்த தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை 1,504 தொகையாகக் காணப்படடமையால் எதிர்பார்க்கபட்ட மட்டத்தை நெருங்கும் சதவீதம் 14 சதவீதமாக காணப்பட்டது. | நாட்டில் நிலவிய கொரோன தொற்றுநோய் நிலைமை, பொருளாதார நெருக்கடி, எரிபொருள் கட்டுப்பாடு, மூலப் பொருட்கள் இறக்குமதி செய்ய முடியாமை, நிர்மாணத் துறையின் பின்னடைவு, உற்பத்திப் பண்டங்களை விற்பனை செய்ய முடியாமை, மின்சாரச் செலவுகள் அதிகரித்தல் ஆகிய காரணங்களினால் அனேகமான தொழிற்சாலைகள் உச்சமட்ட கொள்திறனுடன் செயற்பட முடியாத மட்டத்தை அடைந்திருத்தல ஆகிய காரணங்களினால் தொழிற்சாலைகளில் ஊழியர் எண்ணிக்கை குறைந்து உற்பத்தி அலுவல்களை பேணிச் செல்லப்படுகின்றது என. | கைத்தொழிலாளர்களினால் செயற்திட்ட பிரேரணைகள் சமர்ப்பிக்கும் போது உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கையை நோக்கி நெருங்குவதற்கு கைத்தொழிலாளர்களை ஈடுபடுத்த வேண்டும். |

### 3.3 எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரைகம கைத்தொழில் பேட்டை தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | 2016 ஒக்தோபர் 26 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி 05 கைத்தொழில் துறைகளில் நிறுவுதல் தொடர்பாக முக்கியத்துவம் வழங்கப்பட்டு 200 ஏக்கர் காணியில் ரைகம கைத்தொழில் பேட்டை நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், கைத்தொழில் பேட்டையை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொண்டிருக்காததுடன், மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி அலுவல்கள் குறிப்பிட்டு செயற்திட்டத்திற்கான திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. அதன் காரணமாக கைத்தொழில் பேட்டையின் அபிவிருத்திக்காக ரூபா 298 மில்லியன் தொகை செலவிடப்பட்டு அபிவிருத்தி அலுகல்கள் ஆரம்பிக்கப்பட்டு 07 வருடங்கள் கடந்திருந்த போதிலும், அவற்றின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. | அரசியல் அதிகாரத்தின் தீர்மானத்தின் மீது அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் விரைவாக ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் ஒன்றாக காணப்படுவதனால் இந்தக் கைத்தொழில பேட்டைக்கு ஆரம்பிக்க முன்னர் சாத்தியக்கூறு ஆய்வொன்று அல்லது செயற்திட்டத்திற்கான திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை எனவும், இந்தக் கைத்தொழில் பேட்டை ஆரம்பம் முதல் அரசியல் எதிர்ப்புக்கள் காணப்பட்ட காரணத்தினால் இந்த செயற்திட்டத்தின் வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது எனவும், அதன் பின்னர் நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை அரசியல் உறுதியற்ற தன்மை காரணமாக செயற்திட்டத்தை செயற்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது எனவும், அப்போது கைத்தொழிலாளர்களினால காணியை அபிவிருத்தி செய்யும் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டு கைத்தொழில் பேட்டையை அபிவிருத்தி செய்யும் அலுவல்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என. | கைத்தொழில் பேட்டையின் அபிவிருத்தி அலுவல்களை விரைவாக பூர்த்திசெய்து கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்காக ஊக்குவிக்கும் வேலைத் திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். |
| (ii) | 1993 ஜுன் 24 திகதிய 772/22 இலக்கம் கொண்ட வர்த்தமானியில் அடங்கியுள்ள தேசிய சுற்றாடல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையொன்று பெற்றுக்கொள்வதற்கு தேவைப்படுவது, 10 ஹெக்டயர்களை (24 ஏக்கர்கள்) விட கூடிய அபிவிருத்தி அலுவல்களுக்காக மாத்திரம் என்ற பிரிவின் படி கைத்தொழில் | ரைகம கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி மிகை வலையம் 200 ஏக்கர்களில் ஆரம்பிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்ற பின்னர் அந்தக் காணிப் பகுதிக்காக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிப்பதற்காக கைத்தொழில் தொழில்நுட்ப நிலையத்திற்கு ரூபா 969,278 இற்கான தொகையொன்று வழங்கப்பட்ட | கைத்தொழில் பேட்டையை ஆரம்பிப்பதற்கு முன்னர் சுற்றாடல் சட்டங்களின் தேவைப்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைகளுக்காக செலுத்தப்பட்டிருந்த தொகையினை அணவல் செய்தல் / திருப்பி அறவீடு செய்தல் |

| | | | |
|---|---|---|---|
| | பேட்டையின் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை ஒன்று பெற்றுக்கொள்ளும் தேவைப்பாட்டை தவிர்த்து 200 ஏக்கர்களைக் கொண்ட மொத்த காணியில் 24 ஏக்கர் காணிப் பகுதியில் செயற்திட்ட அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | போதிலும், கைத்தொழில் தொழில்நுட்ப நிலையத்தினால் அந்தக் கருமம் நிறைவேற்றுவதில் தாமதம் அடைந்த காரணத்தினால் கைத்தொழில் பேட்டையை 24 ஏக்கர்களில் ஆரம்பிப்பதற்கு அரசியல் அதிகாரம் மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்கள் இடையே கலந்துரையாடப்பட்டு தீர்மானிக்கப்பட்டிருந்தது என. | மேற்கொள்ள வேண்டும். |
| (iii) | 2023 திசெம்பர் 31 திகதி அளவில் ரைகம கைத்தொழில் பேட்டையின் உள்ளகப் பாதையின் குழாய் விரித்தல் அலுவல்களுக்காக ரூபா 29.57 மில்லியன் தொகை மற்றும் உள்ளகப் பாதைகள் நிர்மாணிப்பதற்காக ரூபா 36.8 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்தக் கருமங்களின் பௌதீக முன்னேற்றம் முன்னேற்றம் 70 சதவீதம் மற்றும் 40 சதவீதமும் காணப்பட்டது. | உள்ளகப் பாதையின் குழாய் விரிக்கும் அலுவல்களுக்காக ரூபா 29.57 மில்லியன் மதிப்பீட்டுத் தொகை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், அரசியல் காரணங்களினால் கைத்தொழில் பேட்டையின் அபிவிருத்தி அலுவல்கள் தற்காலிகமாக நிறுத்துவதற்கு நேரிட்டிருந்தது எனவும், மீண்டும் அபிவிருத்தி அலுவல்கள் ஆரம்பித்த போது நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக மூலப்பொருட்களின் விலை அதிகரித்தல், பெறமதி கூட்டிய வரி 8 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் வரை அதிகரித்தல் உத்தேச நுழைபாதைக்காக வயல் நிலங்களை தனதாக்கல் முடிவடைந்திருக்காமை ஆகிய காரணங்களினால் முன்னர் வழங்கியிருந்த மதிப்பீடு திருத்தப்பட்டதுடன், அந்த திருத்தப்பட்ட மதிப்பீடு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும், குறிப்பிட்ட அங்கீகாரம் கிடைத்த பின்னர் பாதையின் அபிவிருத்தி வேலைகள் கூடிய விரைவில் ஆரம்பிப்பதற்காக எதிர்பார்க்கப்படுகின்றது. | கைத்தொழில் பேட்டைக்கான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் அலுவல்களை விரைவாக பூர்த்தி செய்து கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | கைத்தொழில் பேட்டைக்காக ரூபா 87.96 மில்லியன் செலவிடப்பட்டு நிருவாகக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது பயன்படுத்தப்படாமல் மூடப்பட்டு காணப்பட்டது. | ரைகம கைத்தொழில் பேட்டை 200 ஏக்கர்களுக்காக திட்டமிடப்பட்டிருந்ததுடன், நிருவாகக் கட்டிடம் அரசாங்கத்தின் பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும், 2019 நவம்பர் மாதத்தில் | கைத்தொழில் பேட்டைக்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த நிருவாக கட்டிடத்தின் அலுவல்களை பூர்த்தி செய்து செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்பட்ட அரசியல் மாற்றத்துடன் செயற்திட்டத்தின் வேலை அலுவல்கள் தற்காலிகமாக நிருத்தப்பட்டிருந்த காரணத்தினால் நிருவாக கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என. | |
| (v) | கைத்தொழில் பேட்டைக்காக முதலீட்டாளர்கள் தெரிவு செய்வதற்காக 2017 ஒக்தோபர் 02 திகதி வெளியிடப்பட்ட செய்தித்தாள் அறிவித்தலின் படி 194 முதலீட்டாளர்களிடம் விண்ணப்பம் கிடைத்திருந்ததுடன், 42 விண்ணப்பங்கள் பிரதேச கைத்தொழில் சேவைக் குழுவினால் மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்தது. கைத்தொழில் பேட்டையின் அபிவிருத்தி அலுவல்கள் தாமதம் அடைந்திருந்தமையால், அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்களில் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த 04 முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை அகற்றிக்கொண்டிருந்த காரணத்தினால் ரூபா 1,185.4 மில்லியன் தொகை முதலீட்டின் மூலம் 715 தொழில் வாய்ப்புக்கள் கைத்தொழில் துறைக்கு சேர்ப்பதற்கு கூடியதாக இருந்த சந்தர்ப்பத்தை இழந்திருந்தது. | 2019 நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் காரணமாக கைத்தொழில் பேட்டை செயற்திட்டத்தின் வேலை அலுவல்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன் அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்டிருந்த கொவிட் தொற்றுநோய் நிலைமை, அரசியல் நிலையற்ற தன்னை, பண்டங்கள் இறக்குமதிக்காக தற்காலிகமாக விதிக்கப்பட்டிருந்த வரையறைகள் காரணமாக கைத்தொழில் செயற்திட்டம் செயற்படுத்துவதற்கு தாமதம் அடைந்திருந்தமையால் சில கைத்தொழிலாளர்கள் தமது செயற்திட்டங்களை செயற்படுத்தவில்லை என அறிவித்ததுடன், அந்த செயற்திட்டங்கள் மேல் மாகாண பிரதேச கைத்தொழில் குழுவினால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது என. | பொருத்தமான முதலீட்டாளர்கள் தெரிவு செய்து காணிகள் வழங்கி கைத்தொழில்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | புத்தள கைத்தொழில் பேட்டைக்காக 43 காணித் துண்டுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 38 காணித் துண்டுகள் 20 கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அவற்றில் 05 கைத்தொழிலாளர்கள் மாத்திரம் உற்பத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 03 கைத்தொழிலாளர்கள் கட்டிடங்கள் நிர்மாணித்திருந்த போதிலும் உற்பத்தி அலுவல்கள் ஆரம்பித்திருக்கவில்லை. 05 கைத்தொழிலாளர்கள் கட்டிட நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 07 கைத்தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த 660.13 பர்சஸ் காணி எதுவித அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | எதுவித அபிவிருத்தி அலுவல்களும் மேற்கொண்டிருக்காத கைத்தொழிலாளர்கள் தொடர்பாக எதிர் காலத்தில் நடாத்தப்படவுள்ள பிரதேச கைத்தொழில் சேவைக் குழுவிற்கு சமர்ப்பித்து அதன் பரிந்துரையின் படி இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கைத்தொழிலாளர்களினால் கைத்தொழில் ஆரம்பிப்பதற்கு முன்னர் வழங்கப்படுகின்ற வேலைத் திட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்ற தொடர்பாக தொடர்ச்சியாக தொடர் நடவடிக்கை எடுத்து நடவடிக்கை எடுக்கப்படாத காணிகளை தனதாக்கி வேறு தரப்பினருக்கு சாட்டுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(இ)

| | | | |
|---|---|---|---|
| (i) | மன்னார் மாவட்டத்தில் கைத்தொழில் பேட்டையொன்று நிறுவுவதற்காக 2010 நவம்பர் 09 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் மீன்பிடி, விவசாய மற்றும் உணவு உற்பத்தி கைத்தொழில்களில் முதலீடு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு உரிய திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி, 24 ஏக்கர் காணியில் ரூபா 356 மில்லியன் செலவொன்று மேற்கொண்டு கைத்தொழில் பேட்டை நிர்மாணிக்கப்பட்டு 13 வருடங்கள் கடந்திருந்த போதிலும், இதுவரை கைத்தொழில் ஏதும் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன், 06 ஏக்கர் காணியை பயன்படுத்தி ஒரு கைத்தொழிலாளர் மாத்திரம் ஆடைக் கைத்தொழிற்சாலை ஒன்று நடாத்தப்பட்டு வருகின்றது. | மன்னார் பிரதேசத்தில் முதலீட்டாளர்களின் வேண்டுகோளின் படி கைத்தொழில் ஆரம்பிப்பதற்கான தேவையான நீர், மின்சாரம், உள்ளகப் பாதை முறைமை ஆகியவை அடங்கிய மன்னார் கைத்தொழில் பேட்டை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், பிரதேசத்தில் பொதுவான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த போதிலம், காங்கேசன் துறை மற்றும் திருகோணமலை ஆகிய துறைமுகங்களில் உற்பத்தி முடிவுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்காக வசதிகள் போதியளவு முன்னேற்றமடைத்திருக்காத காரணத்தினால் முடிவுப் பொருட்களை விற்பனை செய்தவதற்கு / ஏற்றுமதி செய்வதற்கு கொழும்புக்கு எடுத்து வர வேண்டிய தேவை ஏற்படுவதனால் போக்குவரத்துக்காக கூடிய செலவொன்று மேற்கொள்ள நேரிடுகின்றதென. இதன் காரணமாக மன்னார் கைத்தொழில் பேட்டையில் கைத்தொழில்கள் ஆரம்பிப்பதற்காக உரிய முதலீட்டாளர்கள் முன்வருதல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், 2019 ஏப்ரல் 21 திகதி ஏற்பட்ட உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல், 2020 இல் ஏற்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமை, பிற்காலத்தில் ஏற்பட்ட அரசியல் நிலையற்ற தன்மை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணங்களினால் மற்றும் கைத்தொழில் பேட்டை நிரப்பரப்பில் மழை நீர் நிரம்புவதும் இந்த நிலைமை மேலும், உக்கிரமாவதற்கு காரணமாக இருந்தது. | கைத்தொழில்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மற்றும் விளைவற்றுக் காணப்படும் காணிகளை பொருத்தமான முதலீட்டார்களை தெரிவு செய்து வழங்குவதற்கும் மேற்கொண்டிருந்த பாரிய கிரயத்திற்கு ஏற்ப நலனொன்று பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | கைத்தொழில் பேட்டைகள் நிறுவுவதற்காக அபிவிருத்தி அலுவல்கள் ஆரம்பிக்கும் போது அவற்றின் பொருளாதார | யுத்த சூழல் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சமூக பொருளாதார அபிவிருத்தியின் மீது ஏற்பட்டிருந்த தாக்கத்திற்கு | கைத்தொழல் பேட்டை நிறுவும் போது சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | அனுகூலங்களை மதிப்பாய்வு செய்தவற்காக சாத்தியக்கூறு ஆய்வு மெற்கொள்வதன் மூலம் மற்றும் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்படும் ஆரம்ப செலவுகளை கவனத்தில் எடுக்க வேண்டியிருந்த போதிலும், மன்னால் கைத்தொழில் பேட்டை நிறுவும் போது அவ்வாறான எதிவித ஆய்வும், மதிப்பீடொன்றும் மேற்கொண்டிருக்கவில்லை. | விரைவான தீர்வொன்றென பிரதேசத்தின் கிராம மக்களின் வாழ்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு பிரதேசத்தின் பொருளாதார செயற்பாடுகளை ஒளிமயமாக்குவதற்காக வருமானம் உருவாக்குவதற்கு உயர்ந்த இயலுமையுடைய கைத்தொழில் துறையின் பங்களிப்பு வழங்குவதற்காக 2010 ஆண்டின் போது மன்னார் கைத்தொழில் பேட்டை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், கைத்தொழில் பேட்டையை நிர்மாணிப்பதற்காக விஷேட ஆய்வொன்றும் மேற்கொள்ளப்படாமல் பெருந்தெருக்கல் முறைமை, நீர், மின்சாரம் ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை விரைவாக அபிவிருத்தி செய்வதற்காக மத்திய அரசினால் அப்போது மேற்கொள்ளப்பட்ட முக்கியத்துவ மற்றும் விரைவான நடவடிக்கை முறைகள் போதியளவாக காணப்படுகின்றது என. | பொருளாதார அனுகூலங்கள் தொடர்பாக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான செலவுகள் தொடர்பாக முறையான மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். மன்னார் கைத்தொழில் பேட்டைக்கான தடைகளை ஆய்வு செய்து பரிகாரம் காணப்பதற்கும் முதலீட்டாளர்களை ஊக்குவித்து கைத்தொழில் பேட்டையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | தயாரிக்கப்பட்ட உணவு உற்பத்தி கைத்தொழில்கள் சார்ந்த பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆய்வு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த உயர்ந்த தரத்தில் காணப்படுகின்ற ஆய்வுகள் மற்றும் புதிய உற்பத்திப் பொருள்களை கைத்தொழிலாளர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அவற்றை வணிகமயமாக்குவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று 2023 மார்ச் 30 மற்றும் 31 திகதிகளில் தனியார் உணவகம் ஒன்றில் நடாத்துவதற்காக ரூபா 2,469,752 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. அங்கு 06 புதிய உற்பத்திகள் மற்றும் ஆய்வுகளை வணிகமயப்படுத்துவதற்காக 06 கைத்தொழில் நிறுவனங்கள் தனது விருப்பத்தை வெளியிட்டிருந்ததென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 திகதி அளவிலும் அந்த புதிய உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு | இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோள் தயாரிக்கப்பட்ட உணவு உற்பத்தி கைத்தொழில்கள் சார்ந்த தெரிவு செய்யப்பட்ட ஆய்வுகள் மற்றும் புதிய உற்பத்திப் பொருட்களை கைத்தொழிலாளர்களுக்கு சமர்ப்பிப்பதன் மூலம் அந்த புதிய ஆய்வாளர்கள் / புதிய உற்பத்தியாளர்கள் மற்றும் கைத்தொழிலாளர்கள் இடையே தொடர்பொன்றினை ஏற்படுத்துதல், கைத்தொழில் துறையின் தேவைப்பாடுகளை இனங்கண்டு ஆய்வுகள் மற்றும் புதிய உற்பத்திகளுக்காக ஊக்குவித்தல் ஆகும் என. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வணிகமயப்படுத்துவதற்கான விருப்பம் தெரிவித்திருந்தவர்களின் புதிய உற்பத்தி மற்றும் ஆய்வுகளின் தற்போதைய முன்னேற்றம் தொடர்பாக தொடர் | ஆய்வுகள் மற்றும் புதிய உற்பத்திப் பொருட்களை வணிகமயப்படுத்துவதற்காக கைத்தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்கு பொருத்தமான வேலைத் திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். அவ்வாறான வேலைத்திட்டமொன்று தெரிவு செய்யும் போது கிரயம் குறைவாக இருத்தலை உறுதிப்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. | நடவடிக்கை ஒன்று மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | |
| (உ) புதிய உற்பத்திகளை வணிக மயப்படுத்துவதற்கான 03 கருத்தரங்குகள் (Symposium) ரூபா 5.55 மில்லியன் செலவொன்று மேற்கொண்டு 2023 ஆண்டின் போது தனியார் உணவகம் ஒன்றில் நடாத்தப்பட்டிருந்தது. அங்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 115 புதிய உற்பத்தியாளர்களின் 15 உற்பத்திகளை வணிகமயப்படுத்துவதற்காக இனங்காணப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 4 மாத்திரம் வணிகமயப்படுத்தலுக்கான உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்காக இணக்கம் தெரிவித்திருந்ததுடன், 11 புதிய உற்பத்திகள் கலந்துரையாடல் மட்டத்தில் காணப்படுகின்றது. அதன்படி, முன்வந்திருந்த புதிய உற்பத்தியாளர்களின் 3 சதவீதம் மாத்திரம் வணிகமயப்படுத்துவதற்கான உடன்படிக்கை மேற்கொள்ள இணங்கியிருந்தது. | கைத்தொழில் அமைச்சின் கைத்தொழில் துறையின் புதிய உற்பத்தி மற்றும் ஆய்வு அறிமுகப்படுத்துவதற்காக புதிய உற்பத்திகளை வணிகமயப்படுத்துவதற்காக 3 கலந்துரையாடல்கள் ரூபா 5.55 மில்லியன் தொகை செலவு மேற்கொண்டு 2023 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. அங்கு உள்நாட்டு ஆய்வு நிறுவனங்கள் மற்றும் பல்கலைக் கழகங்கள் மூலம் மேற்கொண்டிருந்த ஆனால் வணிகமயப்படுத்தியிருக்காத 115 உற்பத்திகள் மற்றும் ஆய்வுகள் கைத்தொழிலாளர்களுக்கு அறிமுகப்படுத்தி அவற்றில் 15 வணிகமயப்படுத்துவதற்கான ஆரம்ப கட்டக் கலந்துரையாடல் இணக்கப்பாடொன்று ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது என. | பொறுத்தமான புதிய வேலைத் திட்டமொன்றின் மூலம் புதிய உற்பத்திகளை வணிகமயப்படுத்துவற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கு கிரயத்தை குறைக்கக் கூடியவாறு புதிய உற்பத்திகளை வாணிபமயப்படுத்தும் வேலைத் திட்டங்கள் செயற்படுத்த வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்படல்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| படஅத கைத்தொழில் பேட்டை ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 105 ஏக்கர் காணி பரப்பில் ரூபா 343.41 மில்லியன் தொகை செலவு மேற்கொண்டு தோல் பதனிடும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிப்பதற்காக 1999 ஆகஸ்ட் 18 திகதி அமைச்சரவை தீர்மானத்தின் மீது நிறுவப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | இந்த கைத்தொழில் பேட்டையின் கழிவுப் பொருட்களை கடலுக்கு அகற்றுவதற்காக திட்டமிடப்பட்டிருந்த காரணத்தினால் மீனவர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் கைத்தொழில் பேட்டை நிறுவும் அலுவல்கள் நிறுத்தப்பட்டிருந்தது. அங்கு செயற்திட்டத்தில் முதலீடு செய்த 06 முதலீட்டாளர்களுக்கு 2019 – 2022 வரையான காலப் பகுதியில் ரூபா 17.55 மில்லியன் தொகை நட்டஈடாக செலுத்தப்பட்டிருந்தது. | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான சுற்றாடல் மதிப்பாய்வு மேற்கொண்ட பின்னர் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | 2006 பெப்ரவரி 15 திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க பலவின அபிவிருத்தி வலையமொன்றென மீண்டும் கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி செய்வதற்காக 23 கைத்தொழிலாளர்களுக்கு 70 ஏக்கர் 01 ரூட் 2.3 பர்சஸ் காணி வழங்கப்பட்டிருந்தது. அதன் மூலம் போதியளவு உற்பத்தியொன்று 34 ஏக்கர் 03 ரூட் பெற்றுக்கொண்ட 10 கைத்தொழிலாளர்கள் மூலமே மேற்கொள்ளப்படுகின்றது. அதன் காரணமாக கைத்தொழில் பேட்டைக்கு ஒதுக்கப்பட்டிருந்த 105 ஏக்கர் காணியில் பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 09 ஏக்கர் 03 ரூட் தவிர மீதியான எண்ணிக்கையில் 60 ஏக்கர்களுக்கான அண்மித்த காணி அளவொன்று விளைவற்று காணப்பட்டது. | படஅத கைத்தொழில் பேட்டை 105 ஏக்கர் கொண்டிருந்த போதிலும், அங்கு 70 ஏக்கருக்கு அண்மித்த தொகை மாத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது எனவும், அபிவிருத்தி செய்யப்படாத காணிப் பகுதிகள் தற்போது கைத்தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், சுமார் 12 ஏக்கர் காணிப் பகுதியொன்று அபிவிருத்தி செய்யப்பட வேண்டிக் காணப்பட்டது என. | கைத்தொழில்களுக்காக உத்தேசியத்துள்ள மற்றும் விளைவற்றுக் காணப்படும் காணிகளை பொருத்தமான முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கும் அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளை பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | படஅத கைத்தொழில் பேட்டைக்காக ரூபா 31.66 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த நிருவாகக் கட்டிடம் தற்போது விளைவற்று காணப்படுகின்றது. | 1999 ஆண்டில் கைத்தொழில் பேட்டையின் நிருவாகக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், கைத்தொழில் பேட்டைக்கு சுற்றியுள்ள மீனவர்களின் எதிர்ப்பு போலவே பிரதேச அரசியல்வாதிகளின் எதிர்ப்பு காரணமாக நிர்மாண அலுவல்கள் நிருத்தி வைப்பதற்கு நேரிட்டது என. 2006 பெப்ரவரி 15 திகதி அமைச்சரவை தீர்மானத்தின் படி இந்த கைத்தொழில் பேட்டையில் கலவை முதலீடொன்று செயற்படுத்துவதற்காக அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது எனவும் அதன்படி, நிருவாகக் கட்டிடம் 2011 ஆண்டு முதல் ஒரு | கட்டிடம் பயன்படுத்துவதற்கு பொறுத்தமற்றது எனின் அதனை உறுதிப்படுத்தி பொருத்தமான செய்முறை ஒன்றின் மூலம் அப்புறப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | கைத்தொழிலாளரின் ஊழியர்களுக்கு பரிமாறுவதற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும், தற்போது மிகவும் சிதைவுற்ற நிலையில் காணப்பட்ட கட்டிடம் அம்பலந்தோட்டை பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப அறிக்கையின் படி பாவணைக்கு உகந்ததாக காணப்படாமையால் 2021 நவம்பர் 30 திகதி முதல் மூடப்பட்டிருந்தது. |

**3.5 பணம் விடுவிக்கப்பட்ட போதிலும் முன்னேற்றம் பெற்றிருக்காத செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கைத்தொழில் பேட்டைகளின் அபிவிருத்திச் செலவுகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,000 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டு செலவுகள் ரூபா 880 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அவற்றில் 09 கைத்தொழில் பேட்டைகளின் 19 அபிவிருத்தி அலுவல்களுக்காக மொத்த மதிப்பீட்டு செலவு ஆகிய ரூபா 489.55 மில்லியன் தொகை ஒரே தடவையில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்தக் கருமங்களின் முன்னேற்றம் 0 சதவீதமாக காணப்பட்டது. தம்புள்ள கைத்தொழில் பேட்டையில் வேலி மற்றும் படலை நிர்மாணிப்பதற்காக மதிப்பீட்டுச் செலவாகிய ரூபா 14.96 மில்லியன் ஒரே தடவையில் செலுத்தப்பட்ட போதிலும் அதன் முன்னேற்றம் 15 சதவீதமாக காணப்பட்டது. | அலுதெபொல, தம்புள்ள, சூரியவெவ, நொச்சியகம, கட்டுநாயக, ரைகம, புத்தளம், நாளந்த மாத்தளை மற்றும் கஹடகஹ கிரபைட் ஆகிய கைத்தொழில் பேட்டையின் அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என. | அபிவிருத்தி செலவுகளுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் போது மதிப்பிடப்பட்ட மொத்த தொகையும் ஒரே தடவையில் செலுத்தப்படக் கூடாது எனவும், பௌதீக முன்னேற்றத்தை கவனம் செலுத்தி கொடுப்பனவு மேற்கொண்ட தொகைக்கு உரிய கருமங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 வருடங்களுக்கு அண்மித்த காலம் முதல் திருத்த வேலைக்காக தனியார் கராஜ் ஒன்றிற்கு அனுப்பப்பட்டிருந்த வாகனம் ஒன்று அதன் திருத்த | இந்த வாகனத்தின் வகை மற்றும் மாதிரியின் படி உதிரிப்பாகங்கள் பெற்றுக்கொள்ளல் மற்றும் திருத்த வேலைகள் | தாமதமின்றி வாகனத்தின் திருத்த வேலை மேற்கொண்டு ஓட்டத்திற்காக இணைப்பதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | வேலை மேற்கொள்ளப்பட்டு ஓட்டத்திற்காக இணைக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்வதற்காக கூடிய செலவொன்று மேற்கொள்ள நேரிடுவதுடன், வருடாந்தம் கிடைக்கக்கூடிய ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாமையால் திருத்த வேலை மேற்கொள்ள முடியாதுள்ளது என இந்த வாகனத்தின் நட்டங்கள் மற்றும் சேதங்கள் மேற்கொள்ளல் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய சீமெந்துக் கம்பனியின் முன்னைய தலைவருக்கு எதிராக கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தின் மூலம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நட்டத்தை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | நட்டத்தை பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ரூபா 6 மில்லின் தொகைக்கான வாகனம் ஒன்று 2019 ஏப்ரல் 11 திகதி விபத்துக்குள்ளாகி இருந்ததுடன், திருத்த வேலைகளுக்காக இரண்டு தனியார் நிறுவனங்களில் 05 வருடங்களுக்கு அண்மித்த காலம தடுத்து வைக்கப்பட்டு திருத்த வேலை ஒன்று மேற்கொள்ளப்படாமல் 2023 செம்தம்பர் மாதத்தில் மீண்டும் அமைச்சுக்கு கொண்டு வரப்பட்டு அமைச்சு வளாகத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. | 2019 ஏப்ரல் 11 திகதி விபத்துக்குள்ளாகிய வாகனத்தின் திருத்த வேலைக்காக தனியார் கராஜ் ஒன்றிலிருந்து வழங்கப்பட்ட மதிப்பீட்டிற்காக காப்புறுதிக் கம்பனியினால் அங்கீகாரம் வழங்கிருக்கப்படாமையால் 2023 ஆண்டளவில் வாகனத்தின் திருத்த வேலை மேற்கொள்ள முடியாமல் போனது என. அமைச்சின் வாகனங்களை அப்புறப்படுத்தும் குழுவிற்கு இந்த வாகனமும் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அங்கு வாகனத்தை காப்புறுதிக் கம்பனிக்கு உரித்தாக்கி அமைச்சிற்கு கிடைக்கக்கூடிய பெறுமதிக்கு அல்லது Cach in lieu இன் கீழ் கிடைக்கக்கூடிய தொகை மற்றும் வாகனத்தை அப்புறப்படுத்துவதன் மூலம் கிடைக்கக்கூடிய பெறுமதி இரண்டில் அரசாங்கத்திற்கு அனுகூலமான முறையில் செயற்படுத்துவதற்கு குழு தீர்மானித்திருந்ததென காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் வாகனத்தை உரித்தாக்கிக் கொண்டு கொடுப்பனவு செய்வதற்காக இணங்கியிருந்த பெறுமதியினை அமைச்சுக்கு அறிவிக்கும் வரை வாகனத்தை | விரைவாக வாகனத்தின் திருத்த வேலை அலுவல்களை பூர்த்தி செய்து வாகனத்தை ஓட்டத்திற்கு இணைத்து நட்டத்திற்கு பொறுப்பு சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்காக அல்லது அப்புறப்படுத்துவதன் மூலம் பணம் பெற்றுக்கொள்ளல் ஆகிய இரண்டிலும் மிகவும் அனுகூலமான தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அப்புறப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | |
| (இ) | முன்னைய அமைச்சரின் இணைப்புச் செயலாளரினால் பயன்படுத்தப்பட்ட வாகனம் ஒன்று 2022 மே 09 திகதி விபத்துக்குள்ளாகியிருந்ததுடன், திருத்த வேலை மேற்கொள்வதற்காக அதன் முகவர் நிலையத்தினால் ரூபா 3,969,455 இற்கான மதிப்பீடொன்று சமர்ப்பித்திருந்த போதிலும், காப்புறுதி நிறுவனத்தினால் ரூபா 2,600,000 தொகை மாத்திரம் நட்டஈடு என அனுமதித்திருந்தது. 2022 ஜூலை 21 திகதி முதல் எதுவித திருத்த வேலையும் மேற்கொள்ளப்படாமல் இந்த வாகனம் முகவர் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. | வாகனத்தில் திருத்த வேலை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | விரைவாக திருத்த வேலை மேற்கொண்டு வாகனத்தை ஓட்ட நிலைக்கு இணைக்க வேண்டியதுடன், நட்டத்தை பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.7 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதிக் கைத்தரி பிடவை மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி முன்னைய இராஜாங்க அமைச்சின் பாதுகாப்பு உத்தியோகபூர்வ வாகனம் என பயன்படுத்தப்பட்டிருந்த வாகனம் 2021 ஜனவரி 13 திகதி ஏற்பட்ட விபத்தில் சேதமடைந்திருந்ததுடன், அந்தச் சந்தர்ப்பத்தில் சாரதியினால் விபத்து தொடர்பாக காப்புறுதி நிறுவனத்திற்கும் பொலிஸ் நிலையத்திற்கும் அறிவித்திருக்கவில்லை. ரூபா 1,323,900 தொகைக்கான வாகன திருத்த வேலைச் செலவு காப்புறுதி நட்டஈடாக கிடைத்திருந்த ரூபா 200,000 கழித்த பின்னர் மீதித்தொகையாகிய ரூபா 1,123,900 அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, இந்த வாகன விபத்தின் மூலம் ஏற்பட்டிருந்த ரூபா 1,123,900 இற்கான நட்டத்திற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்திருக்கவில்லை. | வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு சட்ட உத்தியோகத்தரினால் ஆவணங்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், வழக்குத் தாக்கல் செய்தல் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | விபத்து ஏற்பட்டவுடனே அது தொடர்பாக குறிப்பிட்ட தரப்பனருக்கு அறிவிப்பதற்கு சாரதிகளுக்கு அறிவுரை வழங்கப்பட வேண்டும். நட்டத்தை பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.8 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆண்டு ரூபா 4.5 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு உள்நாட்டு சிவப்புக் களி ஓடுகள் உற்பத்தி செய்வதற்காக இலங்கை தரச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நிதி உதவி வழங்குவதற்கான செயற்திட்டத்தின் மூலம் 30 கைத்தொழிலாளர்களுக்காக இலங்கை தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்காக தேவையான ஆரம்பச் சான்றுபடுத்தும் கட்டணத்தின் 50 சதவீதம் ஒரு நிறுவனத்தினால் உச்ச அளவு ரூபா 150,000 தொகைக்கு அமைச்சினால் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 10 கைத்தொழிலாளர்கள் இதற்காக விண்ணப்பித்திருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 திகதி அளவில் ஒரு கைத்தொழிலாளரும் தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளும் செய்முறையை பூர்த்தி செய்து இந்த நிதி உதவியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த செயற்திட்டம் 2015 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், கைத்தொழில் நிறுவனங்களுக்காக தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளும் கருமம் ஆரம்பித்தல் தாமதமடைந்திருந்தது. ஒட்டுமொத்த இலங்கை களிமண் ஓடு உற்பத்தியாளர்களின் சங்கத்தின் ஒத்துழைப்புடன் மிகவும் பொருத்தமான சில தொழிற்சாலைகளை தெரிவு செய்து இந்த மீதியாக உள்ள தொகையை அந்த தொழிற்சாலைகளுக்கு தரச்சான்றுகள் பெற்றுக்கொள்ளும் கருமத்திற்காக இவ் வருடத்தில் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என. | ஆரம்ப அலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் ஏற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டங்களின் எதிர்பார்த்த இலக்குகளை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கைத்தொழிலாளர்களுக்கு காணிகள் ஒதுக்கும் போது காணிகள் ஒதுக்கிய பின்னர் 35 வருட நீண்ட கால குத்தகை உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட வேண்டியிருந்த போதிலும் 25 கைத்தொழில் பேட்டைகளில் 322 கைத்தொழிலாளர்களுக்காக குத்தகை உடன்படிக்கை கையொப்பமிட்டிருக்கவில்லை. | கைத்தொழில் பேட்டைகளில் காணிகள் ஒதுக்கப்பட்டிருந்த ஆனால் இதுவரை குத்தகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டிருக்காத முதலீட்டாளர்களுக்கு நீண்ட கால குத்தகை உடன்படிக்கை வழங்குவதை விரைவுபடுத்துவதற்காக அமைச்சினால் கைத்தொழில் பேட்டை மட்டத்தில் நடமாடும் சேவையொன்று நடாத்துதல் 2021 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி, 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது 13 நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டிருந்தன என. | கைத்தொழிலாளர்களுக்காக நீண்ட கால குத்தகை உடன்படிக்கை வழங்கும் அலுவல்களை விரைவுபடுத்தல் வேண்டும். காணிகளை ஒதுக்குவதற்கு முன்னர் நீண்ட கால குத்தகை உடன்படிக்கை கையொப்பமிடுவதற்கு தேவையான ஆரம்ப தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 13 கைத்தொழில் பேட்டைகள் தொடர்பாக 107 கைத்தொழிலாளரிடம் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவைக் குத்தகைத் தொகை ரூபா 205,230,683 தொகையாக இருந்தது. | குத்தகை உடன்படிக்கை தயாரித்தல் மற்றும் குத்தகைத் தொகையை சேகரிக்கும் பொறுப்பு நேரிடியாக காணிக்கு உரித்தான நிறுவனங்கள் (பிரதேச செயலகங்கள், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, மகாவெளி அதிகாரசபை) சொந்தமாக உள்ளது. கைத்தொழிலாளர்கள் குத்தகை செலுத்தாமை தொடர்பாக சட்ட செயற்பாடுகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படி குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன என. | குத்தகைத் தொகையை தாமதமின்றி அறவீடு செய்தல் தொடர்பாக அமைச்சு தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் தற்போது நிறுவப்பட்டுள்ள படஅத கைத்தொழில் பேட்டையில் 60 ஏக்கர்களுக்கு அண்மித்த காணி எண்ணிக்கையொன்று குறைபயன்பாட்டுடன் காணப்படுவதுடன், அதற்கு அண்மையிலுள்ள சூரியவெவ 20 ஏக்கர் காணியில் கைத்தொழில் பேட்டை நிர்மாணிப்பதற்காக ரூபா 252.7 மில்லியன் தொகையொன்று செலவிடல் பயனற்ற செலவொன்றாக இருந்தது. | இந்தக் கைத்தொழில் பேட்டை 2022 தேசிய பாதீட்டுப் பிரேரணை ஒன்றின் மூலம் வெளியிடப்பட்டு பிரதேச செயலகம் ஒன்றிற்கு 105 ஏக்கர்களைக் கொண்ட இந்தக் கைத்தொழில் பேட்டை தற்போது வெற்றுக் காணிப் பகுதிகள் காணப்பட்ட போதிலும் இங்கு 02 உணவு உற்பத்திக் கைத்தொழில்கள் உட்பட லெட் எஸிட் பட்டரி, சீமெந்து, உருக்கு, தும்புத்தூள் சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், இந்த கைத்தொழில் பேட்டைக்காக உணவு சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்கள் நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள சூரியவெவ கைத்தொழில் பேட்டையைப் பயன்படுத்தப்படவுள்ளதுடன், தெற்கு கடுகதி நெடுஞ்சாலைக்கு மிகவும் அண்மித்து அமைந்துள்ளமையும் துறைமுகம் மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையம் இந்த இடத்திற்கு அண்மையில் இருப்பதனால் எதிர் காலத்தில் இந்த காணியில் முதலீட்டுச் சந்தர்ப்பங்கள் விரிவடையக்கூடும் என அவதானிக்கப்பட்டு தேசிய பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பொன்றை பெற்றுக்கொள்வதற்காக | திட்டமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள கைத்தொழில் பேட்டைகளின் மூலம் எதிர்பார்த்த அபிவிருத்தி இலக்குகளை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இந்தக் கைத்தொழில் பேட்டை நிறுவுவதற்கான காரணமாக இருந்தது. | |
| (உ) | பிரதேச கைத்தொழில் சேவைக் குழுவின் மற்றும் அமைச்சரவை அங்கீகாரம் இன்றி நாளந்தா எல்லாவெல கைத்தொழில் பேட்டை கட்டம் ஒன்றில் கைத்தொழிலாளர் ஒருவரினால் 01 ஏக்கர் காணியில் 24 வருடங்களுக்கு அண்மித்த காலம் தங்கியிருக்கிறார். கைத்தொழிலாளர்களுக்கு காணிகள் ஒதுக்கும் அமைச்சரவை தீர்மானத்தின் படி அங்கீகாரம் பெற்றுக்கொண்டு உற்பத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், இரண்டு கைத்தொழிலாளர்களினால் அமைச்சரவை தீர்மானத்திற்க புறம்பாக நீண்ட காலமாக உற்பத்திகள் மேற்கொள்ளாமல் பண்டங்கள் வினியோகிக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. | பிரதேச கைத்தொழில் சேவைக் குழு இந்தச் செயற்திட்டத்தை பரிந்துரைக்கப்பட்டது எனவும், ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையால் இதுவரை மதிப்பாய்வுக் குழுவிற்கு சமர்பிக்கபட்டிருக்காததுடன், தற்போது சுமார் 20 ஊழியர்கள் சேவையாற்றுவதுடன், வெற்றிகரமாக உற்பத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்படும் நிறுவனம் ஒன்றாகும் என. | பிரதேச கைத்தொழில் சேவைக் குழுவின் மற்றும் அமைச்சரவையின முறையான அங்கீகாரத்தின் மீது மாத்திரம் கைத்தொழில் பேட்டைகளில் முதலீட்டார்களுக்கு காணிகள் ஒதுக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அங்கீகாரமின்றி தங்கியிருக்கும் கைத்தொழிலாளர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அங்கீகரிக்கப்பட்ட கருமங்கள் மாத்திரம் நிறைவேற்றுவதற்கு கைத்தொழிலாளர்களை தொடர்புபடுத்த வேண்டும். |
| (ஊ) | பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் சிறிய மற்றும் மத்திய அளவிலான கைத்தொழில் வலையங்கள் நிறுவுவதற்கான செயற்திட்டத்தின் கீழ் கிராந்துருகோட்டே, திம்புலாகல, திக்வெல்ல மற்றும் திருகோணமலை கட்டம் III ஆகிய 4 கைத்தொழில் பேட்டைகளுக்கான காணிகள் நில அளவை மேற்கொள்ளல், துப்புறவு செய்தல் மற்றும் காணிகளை துண்டுகளாக பகிர்ந்து வரைவு தயாரித்தல் போன்ற அலுவல்களுக்காக ரூபா 3,266,558 தொகை 2022 ஆண்டு செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்ாண்டின் போது அந்த செயற்திட்டத்தின் அலுவல்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் விளைவற்ற செலவொன்றாக மாறியிருந்தது. | இந்த புதிய 03 கைத்தொழில் பேட்டைகளுக்காக 2021 பாதீட்டின் மூலம் ரூபா 5,000 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், நாட்டில் ஏற்பட்டிருந்த அரசியல் நிலையற்ற தன்மை பொருளாதார நெருக்கடி காரணமாக அரசினால் அபிவிருத்தி அலுவல்களுக்காக பணம் விடுவித்தல் நெருங்கிய மீளாய்வுக்கு உள்ளாகியதுடன், அதன்படி விடுவிக்கப்பட்ட வரையறையான ஏற்பாடுகளை பயன்படுத்தி அப்போது அனேகமான அபிவிருத்தி அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டதுடன், கைத்தொழில் பேட்டைகளின் அலுவல்கள் மாத்திரம் முழுமையாக பூர்த்தி செய்வதற்கு அமைச்சினால் எடுக்கப்பட்ட தீர்மானத்துடன், இந்த 03 கைத்தொழில் பேட்டைகளின் அபிவிருத்தி அலுவல்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது எனவும் மற்றும் பாதீட்டின் மூலம் ஒதுக்கப்படும் | கைத்தொழில் பேட்டைகளின் அபிவிருத்தி அலுவல்களுக்காக முக்கியத்துவ அடிப்படையின் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

ஏற்பாடுகளின் அளவின் படி மற்றும் முக்கியத்துவத்தின் படி எதிர் காலத்தில் 03 கைத்தொழில் பேட்டைகளிலும் அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்படவுள்ளது.

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அமைச்சின் மற்றும் விதாதா பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1798 ஆக காணப்பட்டதுடன், உள்ளவாறான பதவியணி 1690 ஆக இருந்தது. அதன்படி, 134 வெற்றிடங்களும், 26 மிகைகளும் அவதானிக்கப்பட்டது. | இலக்கம் 2289/43 மற்றும் 2022 ஜூலை 22 திகதிய அதி விஷேட வர்த்தமானியின் படி முன்னர் காணப்பட்ட இராஜாங்க அமைச்சுக்களில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி கைத்தொழில் அமைச்சுக்கு இணைக்கப்பட்டதால் சில பதவிகள் மிகையாக காணப்பட்டது. அது தொடர்பாக முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | அமைச்சின் பணிப் பொறுப்புக்களின் படி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்திக்கொள்வதற்கு மற்றும் அதன்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் மிகைகள் தொடர்பாக முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தை வினவி தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |